**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 66** **நாள்: 09.06.2017**

# பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் வீடற்றோர்களுக்கான கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டு, வீடற்றோர்கள் இரவு காப்பகங்களில் தங்க வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*********

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் வீடற்றோர்களுக்கான கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டு, வீடற்றோர்கள் இரவு காப்பகங்களில் தங்க வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வீடற்றோர்களுக்கான கணக்கெடுக்கும் பணியை இரண்டு நாட்கள் மேற்கொள்ளுமாறும், தெருவோரம் தங்கியுள்ளவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் வீடற்றோர்களுக்கான காப்பகங்கள் சென்னை மாநகரில் இயங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இப்பணியானது மண்டல சுகாதார அலுவலர்கள் தலைமையில் துப்புரவு அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள், காப்பக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் காப்பக பணியாளர்கள் கொண்ட குழுவால் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் 204 இடங்களில் தீவிர கணக்கெடுக்கும் பணி நடைபெற்றது.

உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு ஒரு காப்பகம் ஏற்படுத்த வேண்டும் என்ற வழிகாட்டுதலின்படி, இதுவரை சென்னையில் 37 நகர்ப்புற வீடற்றோருக்கான காப்பகங்களும், 10 சிறப்பு காப்பகங்கள் மருத்துவமனைகளில் (ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, அரசு குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, கே.எம்.சி. மருத்துவமனை) தற்போது நகர்ப்புற வீடற்றோர்க்கான காப்பகங்கள் 2013 முதல் செயல்பட்டு வருகிறது.

**காப்பகங்களின் வகைகள்**

| எண் | காப்பகத்தின் வகை | மொத்தம் |
|---|---|---|
| 1 | ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் | 1 |
| 2 | சிறுவர்கள் | 4 |
| 3 | சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் | 1 |
| 4 | முதியோர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 2 |

| | | |
|---|---|---|
| 5 | சிறுமியர்கள் | 3 |
| 6 | ஆண்கள் | 11 |
| 7 | ஆண்கள் மற்றும் பெண்கள் | 1 |
| 8 | மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் | 2 |
| 9 | மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் | 1 |
| 10 | அறிவு திறன் குறைவுள்ள (MR) சிறுவர்கள் | 1 |
| 11 | மாற்றுத்திறனாளி பெண்கள் | 1 |
| 12 | பெண்கள் | 8 |
| 13 | சிறப்பு காப்பகங்கள் | 10 |
| 14 | திருநங்கைகளுக்கான காப்பகம் | 1 |
| | **மொத்தம்** | 47 |

இக்காப்பகங்களின் மூலம்,

- தெருவோர வீடற்ற ஆண்கள், பெண்கள், முதியோர்கள், திருநங்கைகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்பான தங்குமிடம், உணவு, மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற வசதிகளை செய்து தருதல்.
- தெருவோர சிறார்களுக்கு தங்குமிடம் அளித்து அங்கிருந்து பள்ளி சென்றுவர ஏற்பாடு செய்தல்.
- அறிவுதிறன் குறையுள்ள சிறார்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை வசதிகள், ஆற்றுப்படுத்துதல் போன்ற வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கு காலவரையறை நிர்ணயம் செய்தல்.
- அடையாள அட்டைகள் வழங்குதல் (வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, முதியோர் ஓய்வூதியம் )
- திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்
- பிரிந்தவர்களை குடும்பத்தினரோடு சேர்த்து வைத்தல்
- ஒவ்வொரு காப்பகத்திலும் ஒரு ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆற்றுப்படுத்துனர் மேற்கண்ட பணிகளை கண்காணித்து வருகிறார். மேலும், சமையலர்/காப்பாளர் மற்றும் இரு காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- நகர தெருக்களில் வீடற்றோர் யாருமில்லை என்ற நிலையை ஏற்படுத்திட தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை இரவு காப்பகங்களின் மூலம்

- பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை – 5224
- தற்போது தங்கியுள்ள நபர்கள் – 1152
- முதியோர் ஓய்வூதியம் பெற்ற நபர்கள் – 112
- வாக்காளர் அடையாள அட்டை பெற்ற நபர்கள் – 275

- ஆதார் அட்டை பெற்ற நபர்கள்–265
- ஓட்டுநர் உரிமம் பெற்ற நபர்கள்– 16
- ஒய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளி நபர்கள் – 33
- அடையாள அட்டை பெற்ற மாற்றுத்திறனாளி நபர்கள்– 53
- பள்ளியில் சேர்ந்துள்ளவர்கள் – 236
- பிரிந்தவர்களை குடும்பத்தினருடன் சேர்த்து வைத்தல் – 1463
- மறுவாழ்வு செய்யப்பட்டவர்கள் – 1772
- குடியிருப்பு வசதி செய்யப்பட்டவர்கள் – 6

ஆகியோர் பயனடைந்துள்ளனர்.

தற்பொழுது மேற்கொண்ட கணக்கெடுப்பில் மொத்தம் 3574 வீடற்றோர்கள் கண்டறியப்பட்டனர். இதில் ஆண்கள் (60 வயதிற்குட்டவர்கள்) 1292, பெண்கள் 1014 (60 வயதிற்குட்டவர்கள்), குழந்தைகள் 579 (ஆண்கள்–279, பெண்கள்–300), முதியவர்கள் 428 (ஆண்கள்–208, பெண்கள்–220), மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் 25 (ஆண்கள் –16, பெண்கள்–9), மாற்றுத்திறனாளிகள் 12 (ஆண்கள்–11, பெண்கள்–1), பிச்சையெடுப்பவர்கள் 218 (ஆண்கள்–114, ஆண்கள்–64, குழந்தைகள்–40), திருநங்கைகள் 6 பேரும் உள்ளனர்.

இதில் 35 நபர்கள் கணக்கெடுப்பின் போது காப்பகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மேலும் 252 நபர்கள் காப்பகத்தில் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். தொடர் ஆலோசனைகள் மூலம் இவர்களை காப்பகத்தில் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இக்கணக்கெடுப்பின் போது பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 50,000 விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி, பொதுமக்கள் கூடும் முக்கியமான இடங்களில் விழிப்புணர்வு பிரசுரமும் ஒட்டப்பட்டது.

மேலும் இச்சேவைக்காக பெருநகர சென்னை மாநகராட்சி இலவச உதவி எண் 1913 என்ற எண் 24 மணிநேரமும் செயல்பட்டு வருகிறது. இதில் புகார்களை பொதுமக்கள் தெரிவிக்கலாம். மாநகராட்சி இணையதளத்தில் பொதுமக்கள் பயனடையும் வகையில் காப்பகத்தின் முகவரிகள் மற்றும் தொடர்புகொள்ளும் தொலைபேசி எண்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**